**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:- திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2024 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 09 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**I.A.No.04/2023 in O.S.No.89/2021**

சங்கப்பிள்ளை ..... மனுதாரர்/வாதி

**/எதிர்/**

மாவட்ட ஆட்சியர், கரூர் மற்றும் பலர் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 26.06.2024 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.M.புவனேஸ்வரி அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4, 6 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், 8 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.K.S.M.சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 3 விதி 2-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்

(1) மனுதாரர் வழக்கின் வாதி. தனது தந்தைக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டு அவரது இறப்பிற்கு பின்னிட்டு மனுதாரருக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வரும் சொத்தில் பிரதிவாதிகள் மோசடியாக வருவாய்த்துறை ஆவணங்களை தயார் செய்து மின் இணைப்பு பெற முயற்சி செய்ததாகவும், அதன் அடிப்படையில் அவர்கள் பட்டா பெற முயற்சி செய்வதாகவும், எனவே இவ்வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல்

செய்துள்ளார். மனுதாரருக்கு தற்போது 85 வயதாகிறது என்றும், வழக்கிற்கு பின்னிட்டு கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு உடல்நிலை குறைவு ஏற்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் மனுதாரருக்கு காது கேளாமை ஏற்பட்டு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும், தனது தரப்பில் இவ்வழக்கை நடத்த தனது மகன் புன்னியமூர்த்திக்கு பொது அதிகார முகவர் ஆவணம் எழுதிக்கொடுத்திருப்பதாகவும், எனவே தனது மகனை சாட்சியம் அளிக்க அனுமதிக்க கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**1 முதல் 4, 6, 7 எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்**

(2) எதிருரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டுமென்றும், பொது அதிகாரம் கொடுத்திருப்பதாக சொல்வது ஏற்கத்தக்கதல்ல. மேற்படி சாட்சியத்தை இந்நீதிமன்றம் அனுமதிக்க இயலாது. மேலும் மனுதாரர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும், தனக்கு காது கேட்காது என கூறுவது பொய்யான சங்கதி என்றும், இம்மனுவில் ஏற்கத்தக்க காரணம் இல்லாததால் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

(3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

(4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரருக்கு வயதாகி விட்டதாலும், கொரோனா நோய் தொற்றாலும், காது கேட்காததாலும் தனது சார்பில் தனது மகனுக்கு சாட்சியம் அளிக்க அனுமதி வேண்டுமென வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. இம்மனுவுடன் மனுதாரர் தனது மகனுக்கு ஒரு பொது அதிகார ஆவணத்தை 11.09.2023 அன்று ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தில் இவ்வழக்கை நடத்தவும் மனுதாரர் சார்பில் சாட்சியம் அளிக்கவும் தாவா சொத்தை பராமரிப்பு செய்யவும் முழு பொறுப்பையும் மனுதாரர் தனது மகன் புன்னியமூர்த்திக்கு பொது அதிகார ஆவணம் மூலம் கொடுத்துள்ளார். மேலும்

தனக்கு வயதாகி விட்டதாகவும் கூறியுள்ளார். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், மேற்படி ஆவணமானது ஏற்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் மனுதாரர் தனது இயலாமை காரணமாக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க முடியாது என கூறியுள்ள நிலையில் அவர் சார்பில் அவரது மகன் சாட்சியம் அளிக்க அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2024 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 09-ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI Date: 2024.07.09 18:02:26 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

- இல்லை -

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

- இல்லை -

R TAMILARASI Digitally signed by R TAMILARASI Date: 2024.07.09 18:02:32 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**